அட்டவணை: காப்பீட்டாளர்கள் மரபணுப் பரிசோதனைகளை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள்?

பரிசோதனையின் / தகவல்	காப்பீட்டாளர்கள் என் பரிசோதனை முடிவைப் பயன்படுத்த முடியுமா?	
	எனது காப்பீட்டு விண்ணப்பம்	எனது குடும்ப உறுப்பினரின் காப்பீட்டு விண்ணப்பம்
பயனாளருக்கு நேரடியாக வழங்கப்படும் (DTC) மரபணுப் பரிசோதனை	இல்லை	இல்லை
உயிர் மருத்துவ ஆராய்ச்சியிலிருந்து பெறப்படும் மரபணுப் பரிசோதனை		
தேசியத் திட்டத்தின் கீழ் மரபுவழி உயர் கொழுப்புப் (FH) பரிசோதனை		
முன்கணிப்பு மரபணுப் பரிசோதனை	இல்லை, தவிர்: (1) காப்பீட்டுத் தொகை நிதிவரம்புகளுக்குமேல் இருக்க வேண்டும், மற்றும் (2) பரிசோதனை அங்கீகரிக்கப்பட்ட நிலைகளுக்கு மட்டும் (ஹண்டிங்டன் நோய் - HTT, அல்லது மார்பகப் புற்றுநோய் - BRCA1/2).	இல்லை
நோய் கண்டறியும் மரபணுப் பரிசோதனை	ஆம் ஆனால் காப்பீட்டாளர்கள் உங்களைப் பரிசோதனை செய்யக் கட்டாயப்படுத்தவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ முடியாது	ஆம் ஆனால் காப்பீட்டாளர்கள் உங்கள் குடும்ப உறுப்பினரைப் பரிசோதனை செய்யக் கட்டாயப்படுத்தவோ அல்லது அழுத்தம் கொடுக்கவோ முடியாது
கருப்பையில் கருவைப் பொருத்துவதற்கு முன்பு மரபணு நோயறிதல் (PGD), மகப்பேற்றுக்கு முற்பட்ட அல்லது புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான பரிசோதனை.		
மருத்துவ நிலையின் குடும்ப வரலாறு	ஆமாம்	ஆமாம்

குறிப்பு

இந்த அட்டவணை எளிமைப்படுத்தப்பட்ட கண்ணோட்டமாகும். முழு விவரங்களுக்கு, பின்புறத்தில் உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

நினைவிற்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயங்கள்



காப்பீட்டாளர்கள் உங்களை மரபணுப் பரிசோதனை செய்யக் கோர முடியாது.



காப்பீட்டு விண்ணப்பம் செய்யும்போது உங்கள் மரபணுப் பரிசோதனை முடிவுகள் பாதுகாக்கப்படுகின்றன.



காப்பீட்டாளர்கள் உங்கள் குடும்பப் பின்னணி அல்லது அறியப்பட்ட மருத்துவ நிலைகள் பற்றிக் கேட்கலாம்.



இந்தத் தடைக்காலம், அனைத்து ஆயுள் காப்பீட்டுச் சங்க உறுப்பினர் காப்பீட்டாளர்களுக்கும் பொருந்தும். இதில் சிங்கப்பூரில் உரிமம் பெற்ற அனைத்து ஆயுள் காப்பீட்டாளர்களும் அடங்குவர்.

முழு விவரங்களுக்கு இங்கே ஸ்கேன் செய்யவும்

கேள்விகள் அல்லது கருத்துகள் உள்ளனவா? தயவுசெய்து எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும் **HCSA_Enquiries@moh.gov.sg**.

MINISTRY OF HEALTH
SINGAPORE

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது: மரபணுப் பரிசோதனை, காப்பீடு மற்றும் தடைக்காலம்



நுகர்வோர் வழிகாட்டி சுகாதார அமைச்சு, சிங்கப்பூர் (ஜூன் 2025)

மரபணுப் பரிசோதனை ஏன் முக்கியமானது?

மரபணுச் சோதனைகளில் இரண்டு வகைகள் உள்ளன.

மருத்துவ மரபணுப் பரிசோதனை



மருத்துவர்கள் நோய்களைக் கண்டறிதல், நோய் அபாயத்தை முன்கணித்தல், மற்றும் சிறந்த சிகிச்சைகளை தேர்வு செய்தலுக்காக இந்த பரிசோதனைகளை பயன்படுத்துவர்.

மருத்துவம் சாராத மரபணுப் பரிசோதனை



உங்கள் வம்சப் பின்னணியைக் கண்டறிதல் அல்லது வாழ்க்கைமுறை பண்புகளைப் பற்றி அறிதல் போன்ற மருத்துவமற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தலாம்.

மருத்துவ மரபணுப் பரிசோதனை உங்களுக்கு எவ்வாறு உதவும்?

- மரபின்படி ஏற்படும் உடல்நல அபாயங்களை முன்கூட்டியே கண்டறிதல்
- விரைவாகவும் துல்லியமாகவும் நோய்களைக் கண்டறியவும்
- உங்களுக்குப் பொருந்தும் சிறந்த சிகிச்சைகளைக் கண்டுபிடிக்கவும்
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைத் தேர்வுகளைச் செய்யவும்

குறிப்பு:

சில மருத்துவம் சாராத பரிசோதனைகள் உடல்நல அபாயங்களையும் காட்டக்கூடும்; எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள், உங்களால் உறுதிசெய்ய முடியாவிட்டால் எச்சரிக்கையுடன் செயல்பட்டு ஒரு மருத்துவரை அணுகவும்.

தடைக்காலம் என்றால் என்ன?

மரபணுச் சோதனை மற்றும் காப்பீட்டிற்கான தடைக்காலம், குறிப்பிட்ட மரபணுப் பரிசோதனை முடிவுகளைக் காப்பீட்டாளர்கள் உபயோகிப்பதைத் தடுக்கும். இதனால் மருத்துவ பராமரிப்புக்கான மருத்துவ மரபணுச் சோதனைக்கு உட்படுத்தப்படும்போது அல்லது துல்லியமான மருத்துவத்தில் பங்கேற்கும்போது உங்களுக்கு அதிக உத்தரவாதம் கிடைக்கும்.

இது சிங்கப்பூரில் உள்ள அனைத்து ஆயுள் காப்பீட்டுச் சங்க (LIA) உறுப்பினர் காப்பீட்டாளர்களுக்கும் பொருந்தும்.

முக்கியப் பாதுகாப்பு அம்சங்கள்

காப்பீட்டாளர்கள் உங்களைப் பரிசோதனை செய்யக் கட்டாயப்படுத்தவோ,வற்புறுத்தவோ முடியாது.

சில தவிர்க்க முடியாத சூழ்நிலைகளைத் தவிர, காப்பீட்டாளர்கள் உங்கள் முன்கணிப்பு மரபணுப் பரிசோதனை முடிவுகளை கேட்கவோ பயன்படுத்தவோ முடியாது.

காப்பீட்டாளர்கள் உங்கள் குடும்ப மருத்துவ வரலாறு அல்லது கண்டறியப்பட்ட உடல் நல நிலைமைகளைக் குறித்து கேட்கலாம்.

2025 ஆம் ஆண்டிற்கான புதுப்பிப்பு

நீங்கள் தேசிய மரபுவழி உயர் கொழுப்புப்(FH) பரிசோதனைத் திட்டத்தில் சேர்ந்திருந்தால், காப்பீட்டாளர்கள் உங்கள் பரிசோதனை முடிவுகளை (முன்கணிப்பு மற்றும் நோயறிதல் இரண்டும்) கேட்கவோ பயன்படுத்தவோ முடியாது.

நீங்கள் தேசிய FH மரபணுப் பரிசோதனைத் திட்டத்திற்கு வெளியே FH மரபணுச் சோதனையை மேற்கொண்டால், காப்பீட்டாளர்கள் முன்கணிப்பு சோதனை முடிவுகளைக் கேட்கமுடியாது; ஆனால் கண்டறியும் பரிசோதனை முடிவுகளைக் கேட்கலாம்.

தடைக்காலம் உங்களை எப்படிப் பாதுகாக்கிறது?

நீங்கள் ஒருபோதும் மரபணுப் பரிசோதனை எடுத்ததில்லை என்றால்	காப்பீட்டாளர்கள் உங்களைக் கட்டாயப்படுத்தவோ அல்லது வற்புறுத்தி ஒரு பரிசோதனையைச் செய்யச் சொல்லவோ முடியாது.
நீங்கள் மரபணுப் பரிசோதனை எடுத்திருந்தால்	**முன்கணிப்புப் பரிசோதனைகள்[1]** காப்பீட்டாளர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாதவரை உங்கள் முடிவுகளைக் கேட்கவோ, பயன்படுத்தவோ முடியாது. (கீழே பார்க்கவும்) **கண்டறியும் பரிசோதனைகள்[2]** உங்கள் மருத்துவப் பின்னணியின் ஒரு பகுதியாக உங்கள் முடிவுகளைக் காப்பீட்டாளர்கள் கோரலாம்.

[1] மரபணுக் கோளாறின் அறிகுறிகள் அல்லது குறியீடுகள் இல்லாத நபர்களுக்கு எதிர்காலத்தில் நோய் ஏற்படும் அபாயத்தை முன்கணிப்பு பரிசோதனைகள் முன்கணிக்கின்றன.

[2] நோய் கண்டறியும் பரிசோதனைகள், தற்போதைய அறிகுறிகள், குறியீடுகள் அல்லது வழக்கமற்ற மரபணுவற்ற பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் நோய் இருப்பை உறுதிப்படுத்துகின்றன அல்லது நிராகரிக்கின்றன.

முன்கணிப்புப் பரிசோதனை முடிவுகள் எப்போது பயன்படுத்தப்படலாம்?

காப்பீட்டாளர்கள் உங்கள் முன்கணிப்புப் பரிசோதனை முடிவுகளைக் கீழ்காணும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மட்டுமே பயன்படுத்தலாம்:

1

நீங்கள் விண்ணப்பிக்கும் காப்பீட்டுத் தொகை குறிப்பிட்ட நிதி வரம்புகளை விட அதிகமாக இருக்கும்போது, எ.கா. $2 மில்லியனுக்கு அதிகமாக இருந்தால்

+

2

பரிசோதனை அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கானதாக இருக்கும்போது, எ.கா. :

ஹண்டிங்டன் நோய் (HTT மரபணு)	மார்பகப் புற்றுநோய் (BRCA1 அல்லது BRCA2 மரபணுக்கள்)

இல்லையெனில், உங்கள் முன்கணிப்புப் பரிசோதனை முடிவுகளைப் பகிர வேண்டியதில்லை.